தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 32/2026 **நாள்** : 12.03.2026

பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்.05/2024, நாள் 23.04.2024-ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வில் (தொகுதி-I-C பணி) அடங்கியுள்ள மாவட்டக் கல்வி அலுவலர், தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணிக்கான முதல்நிலைத் தேர்வின் முடிவுகள் 12.12.2025 அன்று வெளியிடப்பட்டது. மேற்கண்ட பதவிக்கான முதன்மை தேர்வு 22.03.2026 மு.ப. முதல் 25.03.2026 மு.ப. வரை நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒரு முறை பதிவுத் தளத்தின் (OTR DASHBOARD) மூலமாக விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட அனுமதிச் சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ப.ஸ்ரீ. வெங்கட பிரியா , இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்